## அரசாங்க சேவை சேமலாப நிதியம் - 2014

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அரசாங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் (621 ஆம் அத்தியாயம்) 24(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000 – 1810) இசைவாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காணப்படும் விடயங்களின் விளைவாக ஐந்தொகையிலும் வருமான, செலவினக் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்பாடாத விடயங்களும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். இதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அட்டுறு வட்டி ரூபா 3,358,082 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமானத்தினால் ஆண்டின் பெற வேண்டிய முதலீட்டு வட்டி

வருமானம் அதிகரித்தும் முதலீடுகளின் பெறுமதி அப்பெறுமானத்தினால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சேமலாப நிதிய பங்களிப்புத் தொகைப் பெறுவனவு குறிப்பாக இனங்காணாமை மற்றும் தவறான கணக்கு வைப்பினால் ஏற்பட்ட இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 7,776,647 தொகை மற்றும் ரூபா 85,823 தொகையாக இருந்தன. இம்மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுகளைப் போலவே மீளாய்வாண்டின் போதும் சேமலாப நிதியத்திற்காக சகல பங்களிப்பாளர்களாலும் செலுத்தப்படும் உதவுதொகை மற்றும் அரசாங்கத்தின் உதவுதொகைப் பங்களிப்பு என்பவற்றின் கூட்டுத்தொகையான ரூபா 40,931,305,378 நடைமுறை அல்லாத பொறுப்பாகக் காண்பிப்பதற்குப் பதிலாக உரிமையாக நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கானசான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கொடுக்கல் வாங்கல்களைத் திருப்பதிகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியாதிருந்தது.

(அ) நிதியத்தின் பொருட்டு தனிப்பட்ட கணக்குகளைப் பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால், ஆண்டின் இறுதியிலான கட்டாய உதவுதொகைக் கணக்கு மீதியாகிய ரூபா 16,166,898,487 தொகையை பரீட்சிப்பதற்கு முடியாது போயிற்று. இதற்கு மேலதிகமாக, நிதியத்திற்கு கட்டாய உதவுதொகை கொடுப்பனவுகளை வழங்கிய பங்களிப்பாளர்களிடமிருந்து பெறவேண்டிய நிலுவை மீதிகளும் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது ரூபா 381,356,862 பங்களிப்புப் பணம் பங்களிப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், மேற்படி, நிலைமையின் கீழ் அக் கொடுப்பனவுகள் சரியான தன்மை தொடர்பாக குறித்து திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) சுய விருப்பின் பேரில் பங்களிப்பைச் செலுத்துகின்ற பங்களிப்பாளர்களுக்காக தனிப்பட்ட கணக்குகள் பேணப்படாதிருந்தமையால், ஆண்டின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சுயவிருப்பின் அடிப்படையிலான பங்களிப்புக் கணக்கில் இருந்த ரூபா 24,542,030 மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனானதொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| **(அ)** அரசாங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டம் (621 ஆம் அத்தியாயம்) | |
| (i) 2(2) ஆம் பிரிவு | ஒவ்வொரு பங்களிப்பாளர் பொருட்டும் தனிப்பட்ட கணக்குகள் பேணப்படவேண்டுமாயினும், நிதிய ஆரம்பத்திலிருந்து தனிப்பட்ட கணக்குகள் பேணப்படாதிருந்தன. |
| (ii) 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் |

| | | |
|---|---|---|
| | | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தால் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கத்தவர் கணக்கு மீதிகள் உதவு தொகையாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமாயினும், அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | 7(1) ஆம் பிரிவு | 12 சதவீதமான அரசாங்க பங்களிப்பை திறைசேரிப் பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகாரச்சட்டம் திருத்தப்படாமல் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளுக்கமைய 12 சதவீதமான அரசின் உதவுதொகைகளை குறித்த நிறுவனங்களிடமிருந்தே பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக 06 மாத காலம் தாமதமாக்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டில் வழங்கப்பட்டு, 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும், கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 120,206 தொகையான 03 காசோலைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 486 | மீளாய்வாண்டின் போது கிடைத்து மதிப்பிழந்திருந்த ரூபா 595,258 பெறுமதியான பங்களிப்புப் பணத்தின் 29 காசோலைகள் தொடர்பாக பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள தேறிய பெறுமதி ரூபா 266,835 தொகையான நிலையான சொத்துக்களைப் பரீட்சிப்பதற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 3,227,101,270 மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,757,264,050 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 469,837,220 ஆன அதிகரிப்பு தென்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு மாதத்திலும் நிதியத்தில் செலவு வைக்கப்படும் தொகை சம்பந்தமான அறிவிப்பை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் நிதியத்தின் செயலாளருக்குக் குறித்த நிறுவனத்தினால் அனுப்பி வைக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு மாதத்திற்குமான இவ்வறிவித்தலை சில நிறுவனங்கள் மாத்திரமே அனுப்பியிருந்தன. எனினும், அவ்வறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் முகாமைத்துவம் போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஆ) உயர்ஸ்தானிகர் சேவையில் ஈடுபட்டிருந்த 4 உத்தியோகத்தர்களிடமிருந்து பங்களிப்புப்பணம் நிதியத்திற்கு அனுப்புதல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அந்த பங்களிப்பாளர்களுக்கு அவர்களுக்குரிய பங்களிப்பு இலக்கம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சேமலாப நிதிய முகாமைத்துவ சபையின் தலைவரின் 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் 28 உயர்ஸ்தானிகர் அலுவலகங்களிலும் மத்திய அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் என்பவற்றில் கழிக்கப்படும் பட்டியல்களை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பங்களிப்புப்பணம் மீளச் செலுத்துகை தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது பங்களிப்பாளர் உரித்தாகும் கடமை நிலையத்தின் முகவரி சரியாக பதிவுசெய்யாமையால் 17 சந்தர்ப்பங்களில் ரூபா 1,142,503 தொகையான காசோலை மீளச் செலுத்தப்பட்டிருந்தன.

(உ) 2010, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பிக்கப்பட்டிருந்த 5 பங்களிப்பு விண்ணப்பங்களுக்கான இலக்கம் இல்லாமை, கழிப்பனவு விபரங்கள் இல்லாமை மற்றும் பணம் அனுப்பியமையை உறுதிப்படுத்தல்கள் இல்லாமை அடிப்படையில் நலன்கள் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த போதிலும், நிதியத்தின் தரவு முகாமைத்துவப்படுத்தல் பலவீனம் காரணமாக நலன்களை செலுத்துவதில் மீளாய்வாண்டு வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

திறைசேரிச் செயலாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய 12 சதவீதமான அரசின் மிகையூதியத் தொகை நிதியத்திற்கு கிடைக்காத காரணத்தினால் அத்தொகையை முதலீடு செய்வதன்

மூலம் உழைக்கக் கூடியதாக இருந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியிலான கிடைக்க வேண்டிய அரசின் மிகையூதியத் தொகையான ரூபா 2,331,391,669 தொகை மீளாய்வாண்டிற்குரிய கணக்கிடப்பட்ட சராசரி திறைசேரி வட்டியான 8.8 சதவீதத்திற்கு முதலீடு செய்வதற்கு முடியாதிருந்தமையால் ரூபா 205,162,467 ஆன வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**4.3 செயலாற்றல்**

நிதியத்தின் அங்கத்தவர்களால் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பித்த விண்ணப்பங்களில் 3,646 விண்ணப்பங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முதலீடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு